# கடனும் கஜானாவும் - ஆட்சிகளும் காட்சிகளும்!



ஒரு நாட்டில் தனிநபர் கடன் தனியார்துறை கடன், ஒன்றிய அரசு கடன், மாநில அரசுகள் கடன் என பல வகையான கடன்கள் உண்டு. அதே போன்று வரி வருவாய், வரிசாரா வருவாய் தொடர்ந்து அரசுகளுக்கு வந்து கொண்டே இருக்கும்.

ஒரு வங்கியில் எந்த தனி நபரும் எவ்வித வருமானமும் இன்றி கடன் வாங்க முடியாது.

ஒரு வங்கி பல்வேறு வகை கடன்களை பல்வேறு நபர்களுக்கு வழங்கும் போது கடன் வாங்குபவர்களின் சொத்து மதிப்பு, ஊதியம் வழியாக வரும் வருமானம் வணிகத்தின் வழியாக வரும் வருமானம் திருப்பி அளிக்கும் திறன் ஆகிய கூறுகளை ஆய்வு செய்யும்.

இத்தகைய ஆவணங்களை சரி பார்த்து பின்பு தான் கடன்களை வங்கிகள் வழங்குகின்றன. கஜானாவில் எவ்வித வருவாய் இன்றி பொதுக்கடன்களை அரசுகள் எழுப்ப முடியாது. கடன்களைப் பற்றி வரலாற்றில் பல அதிர்ச்சியான, சுவையான தகவல்கள் பரந்து கிடக்கின்றன.

இத்தகவல்கள் அரசுகள் வாங்கிய கடன்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக உள்ளன. குறிப்பாக, 18ஆம் நூற்றாண்டிற்கு பிறகு தான் பல நாடுகளில் அரசுகள் கடன் வாங்கி பொது செலவினை மேற்கொண்டன.

பிரித்தானிய அரசு இந்தியாவை ஆட்சி செய்த போது உருவாக்கியது தான் முதல் அரசு கடனாகும். அதை தான் பொதுக் கடன் என்று இன்று குறிப்பிடுகிறோம். போர்கள் தான் பல நாடுகளில் பொதுக் கடன் பெருகுவதற்கு காரணமாக அமைந்தன. இன்றும் அதே நிலை தான் தொடர்கின்றது.

ஐரோப்பாவில் நடந்த போர்களுக்கும், இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகாதிபத்திய நாடுகள் நடத்திய போர்களுக்கும் செய்த செலவினை இந்தியப் பொதுக்கடனாக மாற்றி பிரித்தானிய ஆட்சி இந்திய மக்களின் மீது வரிச்சுமையை ஏற்றியது .இன்றைய கடன் நாளைய வரி என்று பொது நிதியியல் நூல்களில் குறிப்பிடுவதுண்டு.

சான்றாக, 1765ஆம் ஆண்டு வங்கத்தில் காலூன்றி ஆதிக்கம் செலுத்திய கிழக்கிந்தியக் குழுமம், இந்திய துணைக் கண்டத்தில் பிரெஞ்சுப் படையினருக்கும் இங்கிலாந்து படையினருக்கும் நடந்த போர் செலவினை அன்றைய வங்காள அரசு ஏற்கும்படி செய்தது.

இப்படிப்பட்ட சுரண்டல் ஆதிக்க நிகழ்வை வங்காளத்தைச் சேர்ந்த பொருளாதார அறிஞர் ஆர்.சி.டட், "இந்தியா தனக்கான நிர்வாகச் செலவினையும் ஏற்றுக்கொண்டது.

அடிக்கடி நடக்கும் போர்களுக்கும் இந்தியப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும் இந்தியத் துணைக்கண்டத்தின் வருவாயிலிருந்து எடுத்துதான் செலவு செய்யப்பட்டது" (India paid for her own administration; paid also for the frequent wars of conquest and annexation in India by R.C.Dutt, Economic History of India) என்று தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1834இல் இந்தியாவின் கடன் அன்றைய பண மதிப்பில் 36.9 கோடி ரூபாயாகும். மேலும், ஆப்கானிஸ்தான், சிந்து, குவாலியர், இரண்டாம் பர்மா போர், இரண்டு முறை சீக்கியர்களுடன் நடைபெற்ற போர்கள் ஆகிவற்றுக்கான செலவினை அரசுக் கடனாக மாற்றி இந்திய மக்களின் மீது கடன் சுமையை பிரித்தானிய ஆட்சி ஏற்றியது. 1857இல் தொடங்கிய படைவீரர் புரட்சி (Mutiny) காலத்தில் ஏற்பட்ட போர் செலவையும் சேர்த்ததனால் இக்கடன் தொகை ரூ.60 கோடியாக உயர்ந்தது.

1861ஆம் ஆண்டில் இக்கடன் தொகை ரூ.693 கோடியாக உயர்ந்தது.1947ஆம் ஆண்டில் இந்தியா விடுதலை அடைந்த போது, பாகிஸ்தான் பிரிந்த போது, பிரித்தானிய கஜானாவில் நிதியும் கடனும் இருந்தது. இவற்றை இரண்டு நாடுகளுக்கும் பங்கிடுவதற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

பிரிந்த பாகிஸ்தானுக்கு அன்றைய ரூபாய் மதிப்பில் 75 கோடியை கொடுக்க இந்தியா ஒப்புக்கொண்டது. சில மாதங்களுக்கு பிறகு காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் இந்திய போர் தொடங்கியது. அந்நேரத்தில் இந்தியா இறுதி தவணையாக கொடுக்க வேண்டிய ரூபாய் 55 கோடியை உள்துறை அமைச்சர் படேல் தர மறுத்தார். உத்தமர் காந்தி வகுப்பு கலவரத்தை தடுப்பதற்கு உண்ணாநிலை போராட்டத்தை தொடங்கினார்.



பேராசிரியர்
**மு.நாகநாதன்**

அப்போது பாகிஸ்தானுக்கு கொடுக்க வேண்டிய மீதி தொகையை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நடுவண் அரசும் மீதி தொகையை பாகிஸ்தானுக்கு அளித்துவிட்டது. இது ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு கடும் கோபத்தை உண்டாக்கியது.

உத்தமர் காந்தியை ஏன் சுட்டேன் என்று ஆர்.எஸ்.எஸ். கொலைகாரன் கோட்சே பல காரணங்களை குறிப்பிட்டான். அதில் ஒன்று காந்தியார் பாகிஸ்தானுக்கு மீதி தொகையை காந்தி வலியுறுத்தியதும் ஒரு காரணம் என்று கோட்சே குறிப்பிட்டுள்ளான்.

இன்று வரை இந்தியா-பாகிஸ்தான் கஜானா நிதி கடன் பிரச்சினை தீரவில்லை. ஒன்றிய அரசின் 2023 ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வு அறிக்கையில் கோட்சே பாணியில் பாகிஸ்தான் ரூபாய் 6300 கோடி பழைய கடனை திருப்பி தர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. அதற்கு பாகிஸ்தான் இன்னும் இந்தியா கொடுக்க வேண்டிய பல ஆயிரம் கோடி ரூபாய் அளிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு, அரசுக் கடனைப் பற்றியும், அரசு கஜானாவைப் பற்றியும் பல நிகழ்வுகளும் உண்டு. அவற்றிற்கு பல பரிமாணங்களும் உண்டு.

இன்றைய நரேந்திர மோடி ஆட்சியில் ஒன்றிய அரசு ஆண்டு தோறும் வாங்கி வருகிற கடன்கள் பல்மடங்காக பெருகிக் கொண்டே வருகிறது. குறிப்பாக, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியை விட்டு விலகிய 2014ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த கடன் தொகை ரூபாய் 55 இலட்சம் கோடியாகும்.

கடந்த 12 ஆண்டு காலமாக நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் தற்போது ரூபாய் 181.74 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் இந்த கடன் தொகையை கணக்கிடும் போது இந்தியாவினுடைய ரூபாய் மதிப்பையும் கணக்கிட வேண்டும்.

இந்தியா வெளிநாடுகளில் இருந்து பலவகைப் பொருட்களை இறக்குமதி செய்யும் போது அமெரிக்க டாலர் மதிப்பில்தான் வர்த்தகம் நடைபெறுகிறது. இச்சூழலில் ரூபாயின் மதிப்பு அமெரிக்காவின் ஒரு டாலருக்கு நிகராக 2013இல் ரூபாய் 54ஆக இருந்து 2026 மே 16 அன்று 96 ரூபாயாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால்நரேந்திரமோடிஆட்சிஇந்தியப்பொருளாதாரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்நியச் செலாவணி இருப்பில் ஏற்பட்டு வரும் இழப்பைச் சரி செய்வதற்குதான் ஐந்து மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையேற்றத்தை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளது.

இது போன்ற பல பொருளாதார சரிவுகள் தொடரும் நிலையில் ஒன்றிய அரசின் நிதி அளவு சரிந்து, கடன் அளவும் மேலும் உயர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இது போன்ற கடனை பற்றிய பல்வித விவாதங்கள் பல நாடுகளில் தொடர்கின்றன. சான்றாக அமெரிக்காவின் (ஒன்றிய அரசு) கூட்டரசின் கடன் தொகை 2025 ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 123 விழுக்காடு அளவு உயர்ந்து விட்டது.

2023 ஆண்டின் புள்ளிவிவரங்கள் படி சீனா பல நாடுகளுக்கு கடனை அளித்துள்ளது. பல நாடுகளில் உள்ள அரசு, தனியார்களுக்கு 140 பில்லியன் டாலர் மதிப்பிற்கு கடன் அளித்துள்ளது.

இந்த மொத்த கடன் தொகையில் அமெரிக்கா தான் சீனாவிடமிருந்து அதிக கடனை வாங்கி உள்ள நாடாகும். இந்த மே திங்களில் 13ஆம் தேதி அன்று அமெரிக்க டிரம்ப் சீனா சென்றார். அமெரிக்கா கஜானா காலியாகி வருகிறது. எனவே நான் டிரம்பிடம் வர்த்தகம் தொடர்பாக பேச மாட்டேன் என்று சீனத் தலைவர் ஜி பிங் கூறவில்லை. ஜப்பான் கடன் அளவு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி அளவைவிட 200 விழுக்காட்டிற்கு மேல் உயர்ந்து வருகிறது.

மற்ற நாடுகளுக்கு கடன் அளிக்கும் சீனாவின் கடன் அளவு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி அளவை விட 300 விழுக்காடு அளவிற்கு உள்ளது. குழுமங்கள் வாங்கிய கடன் (Corporate Sector Debt) குடும்பங்களின் கடன் அளவு (Household Sector Debt) இதில் அடங்கும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்கள் வாங்கிய கடன் 2015-16இல் ரூபாய் 27 இலட்சம் கோடியாகும், 2023-24இல் ரூபாய் 84 இலட்சம் கோடியாக உயர்ந்தது. தமிழ்நாட்டின் கடன் அளவு 2026இல் ரூபாய் பத்து இலட்சம் கோடியாக உள்ளது. இந்த கடன் சுமை மாநிலத்தின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 26.1 விழுக்காடு அளவே உள்ளது.

பா.ஜ.க. ஆளும் உத்திரப் பிரதேசத்தின் கடன் அளவு 31 விழுக்காடாக உள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் 37 விழுக்காடாகவும், பீகார் மாநிலத்தில் 35 விழுக்காடாகவும் உள்ளன. ஆனால் இந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதிப்பகிர்வு தொடர்ந்து உயர்ந்துகொண்டே செல்கிறது.

சான்றாக, ஐந்து தென்னக மாநிலங்கள் இணைந்து ஒன்றிய அரசிடமிருந்து ஒட்டுமொத்தமாக 17 விழுக்காடு அளவிற்கு தான் ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வினைப் பெறுகின்றன. ஆனால், இந்த ஐந்து மாநிலங்களின் மொத்த கூட்டுத்தொகையான 17 விழுக்காட்டினை உத்திரப் பிரதேசம் மட்டுமே பெறுகிறது.

தமிழ்நாடு கடந்த ஐந்தாண்டு கால திமுக (2021-2026) ஆட்சியில் சிறந்த முறையில் நிதி மேலாண்மையை மேற்கொண்டு, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்ததால் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி 2024-25இல் 11.19 விழுக்காடாகவும், 2025-26ஆம் ஆண்டில் 10.83 விழுக்காடாகவும் இருந்தது. இந்த உயர் வளர்ச்சி சாதனையை எந்த இந்திய மாநிலமும் படைக்கவில்லை.

மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்கள் ஒன்றிய அரசு விதித்த வரம்பு எல்லையை மீறி கடன் பெறவே முடியாது. பிரித்தானிய ஆட்சியில் இந்தியர்கள் வளர்ந்துவிடக் கூடாது என்றும் தங்கள் கட்டுப்பாட்டிலேயே மாகாண அரசுகள் இருக்க வேண்டும் என்று ஆதிக்க மனப்பான்மையோடு மாநிலங்க ளுக்கு வரி, நிதி உரிமை களை 1919, 1935ஆம் அண்டுகளின் அரசமைப்புச் சட்டங்களில் போதிய அளவிற்கு வழங்கவில்லை.

மேலும், 1935ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தில் மாகாண அரசுகள் கடனைப் பெற்று அதை வளர்ச்சிக்கான திட்டங்களில் முதலீடு செய்து வளர்ந்துவிடக் கூடாது என்ற தீய நோக்கில் அரசமைப்புச் சட்ட விதிகளை பிரித்தானிய அரசு வகுத்தது. அதே பிரிவுகள்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் (1950) அப்படியே இணைக்கப்பட்டன. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 292, ஒன்றிய அரசு எவ்வித கட்டுப்பாடுமின்றி, தடையின்றி அதிக அளவில் கடன்களை எழுப்ப முடியும்.

ஆனால், அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் பிரிவுகள் 293(3), 293(4)படி மாநில அரசுகள் ஒன்றிய அரசின் விதிகளுக்கு உட்பட்டே கடன்களை பெற முடியும். நிதிக்குழுக்கள் விதிக்கின்ற வரையறைகளை மீறி மாநிலங்கள் கடன்களின் அளவை உயர்த்த முடியாது.

இந்திய நிதிப் பொறுப்புடைமை மற்றும் வரவு-செலவு மேலாண்மைச் சட்டத்தின்படி (Fiscal Responsibility and Budget Management (FRBM) Act, 2003) மாநிலங்கள் குறிப்பிட்ட அளவை மீறி கடன்களைப் பெற முடியாது.

அதே நேரத்தில் பாஜக ஒன்றிய அரசு கடந்த 12 ஆண்டுகளில் பெரு முதலாளிகள் நடத்தும் நிறுவனங்களுக்கு 16 இலட்சம் கோடி அளவிற்கு பொதுத் துறை வங்கிகளில் இருந்து வாங்கிய கடனை தள்ளுபடி செய்துள்ளது. மேலும், மாநில அரசுகள் தங்களது நிதிப்பத்திரங்களை அளித்து வங்கிகளில் இருந்து உரிய கடன் பெறும் வாய்ப்பினை மாநில அரசுகளுக்கு தராமல், ஒன்றிய அரசு கடந்த 12 ஆண்டுகளாக தனியார் பெரு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு எவ்வித கட்டுபாடுகளையும் கடுமையான முறையில் பின்பற்றாமல் கடன் அளித்து நாட்டிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் இந்த தனியார் பெரு நிறுவனங்களுக்கு நேர்முக நிறுவன வருமான வரியை 2019இல் 30 விழுக்காட்டிலிந்து 22ஆக குறைத்து பல இலட்சம் கோடி ரூபாய் ஒன்றிய அரசிற்கு வர வேண்டியவ வரி வருவாயை குறைத்துள்ளது.

இது போன்ற பல காரணங்களால் தனது நிதி வருவாயை இழந்த ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிதிப்பகிர்வையும் தொடர்ந்து குறைத்து கொண்டே வருகிறது.

ஆனால், திமுக ஆட்சி அமையும் போதெல்லாம் சரியான பொருளாதார நிதியியல் காரணிகளை ஆய்ந்து சிறந்த வகையில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, அத்திட்டங்களின் பயன்களை ஏழை, எளியோர் ஏற்றம் பெற வழிவகை செய்ததை நோபல் பரிசுப் பெற்ற அமெர்தியா சென் உட்பட பல பொருளாதார அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 6 விழுக்காட்டினை ஒன்றிய அரசு எட்டுவதற்கே திணறிக் கொண்டிருந்த போது ,

சிறந்த நிதி மேலாண்மையை கடந்த ஐந்தாண்டுகளாக மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியையும், புதுமையான சமூக நலத்திட்டங்கள் வழியாக ஏழை, எளியோர் வாழ்வில் ஏற்றம் பெற செய்த நமது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் சிறப்பாக செயல்பட்ட திமுக அரசு எங்கே?

பொருளாதார, நிதி அமைப்புகள் அரசமைப்புச் சட்ட விதிகள் அதன் நடைமுறைகள் போன்ற எவற்றையும் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், குறை கூறும் நோக்கில் கஜானா காலி என்று எழுதிக்கொடுத்த சினிமா வசனத்தை முதல்வர் ஜோசப் விஜய் பேசியது அறியாமையின் உச்சமா? இதுதான் தூய ஆட்சியின் தொடக்கமா?

---

## 94.31 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்!

# தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள்!

## மாணவர்களை விட மாணவிகளே அதிக அளவில் தேர்ச்சி!

சென்னை, மே 22 -

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் (மே 20) வெளியானது. தேர்வு எழுதிய மாணவர்களில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

தமிழக பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு (மார்ச் 2026) கடந்த மார்ச் 11ம் தேதி தொடங்கி கடந்த ஏப்.6ம் தேதி நிறைவடைந்தது. சுமார் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதினர். தொடர்ந்து விடைத்தாள் திருத்த பணிகள் தொடங்கி நிறைவடைந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை வெளியிட்டது.

மொத்தம் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதியதில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வழக்கம்போலவே இந்த முறையும் தேர்ச்சி விகிதத்தில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே முன்னிலை வகிக்கின்றனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 92.15 சதவீதம், மாணவிகளின் எண்ணிக்கை 96.47 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவர்களை விட 4.32 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதத்தை பொறுத்தவரையில் புதுக்கோட்டை (97.57%), சிவகங்கை (97.54%), தஞ்சாவூர் (97.41%), திருச்சி (97.31%), கன்னியாகுமரி (97.30%) மாவட்டங்கள் முதல் 5 இடங்களை பிடித்துள்ளன.

அரசு பள்ளிகளின் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 91.66 சதவீதம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

தமிழ் 98.43%, ஆங்கிலம் 99.44%, கணிதம் 97.36%, அறிவியல் 98%, சமூக அறிவியல் 97.93%. பாட வாரியாக தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழ் 34 , ஆங்கிலம் 93, கணிதம் 3194, அறிவியல் 10476, சமூக அறிவியல் 3336 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மீது

# தாக்குதல் நடத்தியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

**சென்னை, மே 22 -**

**தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**



அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சியின் செய்தி யாளர் ஹாஜா மொய்தீனின் வீட்டிற்குள் புகுந்து மூன்றுக்கும் மேற்பட்ட சமூக விரோதிகள் அவரை கண்ணாடி பாட்டிலால் தலையில் அடித்து கடுமையாகத் தாக்கி இருக்கின்றனர். இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

செய்தியாளர் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வழக்கை காவல்துறை திசை திருப்புவதாகவும் தகவல்கள் வருகின்றன. நேர்மையான முறையில் விசாரணை மேற்கொண்டு சமூக விரோதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கும் ஊடகவியலாளர்களுக்கு உரியப் பாதுகாப்பைத் தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

## நமச்சிவாயம் தலைமை! மைதீன்கான், கிரிஜாகுமார் முன்னிலை! வேட்பாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# நெல்லையில் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டம்!

நெல்லை.மே.22 –

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க.வேட்பாளர் சு.சுப்பிரமணியன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் அடிப்படையில் நெல்லை டவுணில் சந்திப் பிள்ளையார் கோவில் திடலில் பேட்டை பகுதி தி.மு.க.சார்பில் பொதுக்கூட்டம் நெல்லை பேட்டை பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் தலைமையில் கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம் மைதீன் கான், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார் மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம்,மாநில மாற்றுத்திறனாளி அணி துணைச் செயலாளர் வேங்கை வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.


கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்களின் ஆலோசனைப்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் அறிவுறுத்தலின்படி தி.மு.க. சார்பில் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட சு.சுப்பிரமணியனுக்கு ஆதரவாக வாக்களித்த மரியாதைக்குரிய வாக்காள பெருமக்கள் மற்றும் தி.மு.கழக சொந்தங்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் நெல்லை டவுன் சந்திப்பிள்ளையார் கோவில் அருகில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி சார்பில் பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் நெல்லை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளருமான சு.சுப்பிரமணியன் பங்கேற்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் உலகநாதன்,வட்ட கழக செயலாளர்கள் லெனின், முத்துராமன், ஆனந்தபெருமாள், கேபிள் குமரேசன், மணிகண்டன், மூத்த முன்னோடி எஸ்.டி.நாதன், பகுதி அவைத் தலைவர் கே.என்.சுப்பையா, பொருளாளர் பாஸ்கர்,முன்னாள் மாவட்ட பொருளாளர் அருண்குமார்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன்,தலைமைக் கழக பேச்சாளர்கள் மைக் மணி,நெல்லை மணி,திராவிட மணி,மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் தளபதி ஆறுமுகம்,மாநகர பிரதிநிதி சிவா, மாநகராட்சி தொழிலாளர் அணி அமைப்பாளர் பெப்சி சரவணன், சிறுபான்மை யினர் அணி சார்லஸ்,மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் மகாராஜன்,மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார், மாநகர மாணவரணி அமைப்பாளர் வினோத்குமார், மாணவரணி துணை அமைப்பாளர் சித்ரா முத்து சுப்பிரமணியன், இலக்கிய அணி வைரமணி,வர்த்தக அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணகுமார், அயலக அணி துணை அமைப்பாளர்கள் கணேச பெருமாள், அந்தோணி ராஜ், விநாயகம், இலக்கிய அணி ராமசந்திரன்,அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, முறுக்கு கடை கணேசன், தொழிலாளர் அணி சங்கர் கணேஷ், சுற்றுச்சூழல் அணி முருகன், இளைஞர் அணி சங்கர், அய்யம் பெருமாள்,நிர்வாகிகள் பட்டு,சத்யா ஆறுமுகம்,உலகநாதன்,மாடசாமி, சேர்மன்துரை, சக்திவேல், சுத்தமல்லி ஐயப்பன், சுத்தமல்லி ராஜ்குமார்,ஆறுமுகம்,வயல்தெரு வெங்கடேஷ்,மகளிர் அணி பத்மா, ரேவதி அசோக், கிருஷ்ணபேரி மணிகண்டன்,செல்வ பெருமாள், பால்ராஜ், மணி, நியாஷ், சோமு, வேலாயுதம்,பரணி ஆறுமுகம், சுடலை கண், ராமர், ஜெய்கணேஷ், அக்பர், அருண் செல்லத்துரை உள்பட கழக சொந்தங்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

# ...எத்தூர்...



பரிகாரமே

இல்லாத

பாவத்தை

செய்திருக்கிறார்கள்

அவர்கள்...

தங்கத்தை
மறுத்து

தவிட்டுக்கு
மயங்கி
இருக்கிறார்கள்..

அவர்கள்
தவறவிட்டது
தலைவனை
அல்ல
ஒரு
தகப்பனை

ஆனாலும்

எட்டி உதைக்கும்
குழந்தையை

முத்தமிடும்
தாயாக

நன்றி மறந்தவர்களுக்கு

முதல் ஆளாக
ஓடிப் போய்

நன்றி
சொல்லிவிட்டு வந்திருக்கிறது
அந்த
நல்ல மனசு

உண்மை
ஓரிடத்தில்
புதைந்தாலும்
வேறிடத்தில்
முளைத்து விடும்

ஆனால்
முதிர்ச்சியற்ற
மோகத்தில்
தங்களையே

மூழ்கடித்துக்
கொண்ட
அவர்கள்...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*